# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
# O.S.NO.150/2009

24.07.2018

வாதி தரப்பு குறுக்கு விசாரணை
பி.சா.2- தனசேகரன், த/பெ.சண்முகசுந்தரம்

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஸ்ரீராம் பைனான்சில் இருப்பதாகவும் மற்ற வழக்கு சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் தரப்பினர்கள் வழக்கில் என்ன தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசல் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பைனான்சில் வைத்து கடன் பெற்றிருந்தால் கடன் திருப்பி செலுத்தியதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. கடன் திருப்பி செலுத்தவில்லை. நிலுவையில்தான் உள்ளது. மாதத்தவணை செலுத்தியிருந்தால் அதன் இரசீதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் தவணை இரசீதுகளை தாக்கல் செய்யவில்லை. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் கொடுக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் பி.சா.ஆ.8 ஆவணத்தை பொய்யாக உருவாக்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. அடமானம் வைக்கவில்லை என்றால் அம்மாதிரி பைனான்சில் கொடுக்க மாட்டார்கள். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் எந்த தேதியில் நான் கடன் பெற்றிருக்கிறேன் என்றோ, ஆவணத்தை எந்த தேதியில் நான் கொடுத்தேன் என்றோ குறிப்பு எதுவும் இல்லாததால் பி.சா.ஆ.8 நம்பத்தகுந்த ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. அசல் 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அதன் உண்மைத்தன்மை வெளிப்பட்டு விடும் என்பதால்தான் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பைனான்சில் தாக்கல் செய்திருந்தால் அவர்கள்தான் வந்து அதை குறித்து சாட்சியம் அளித்திருக்க வேண்டும் என்றாலும், நான் சாட்சியம் அளித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பைனான்சில் லெட்டர் தான் கொடுப்போம் என்று சொல்லிவிட்டார்கள். பைனான்ஸ் காரர்களின் இந்த லெட்டர் பி.சா.ஆ.8 வழக்கிற்காக பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றாலும், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

Sd/-தனசேகரன்

| |
|---|
| சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.<br><br>Sd/-S.Indulatha,24.07.2018<br>மாவட்ட உரிமையியல் நீதிபதி<br>பல்லடம் |